## ஏப்ரல் - 8

**"பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது."**

**-எபி 10 : 38.**

பின்வாங்கிப் போதல், முதலில் பலியின் நெருக்கமான வழியிலிருந்து ஒரு மிகவும் அற்பமான பிரிவாயிருக்கலாம். ஒருவேளை பின்னால் விட்டு வந்த காரியங்களுக்காக ஒரு பெருமூச்சோடு கூடிய பின்னிட்டு பார்ப்பதாயிருக்கலாம். அதன் பலனாக நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் கொஞ்சம் வேகம் குறைந்து, பிறகு விழுந்துபோன சுபாவத்தின் அடங்கா ஆசைகளுக்கு சார்பாக சத்தியத்தை விட்டுக் கொடுக்க ஒரு சிறு மனச்சார்பு ஏற்படலாம். இப்பொழுது சோதனைக்காரனின் உபாயங்களுக்கு வழி ஆயத்தம் பண்ணப்படுகிறது. இவ்விதமாக நம்முடைய விஷயத்திற்கு மிகவும் தகுந்த விதத்தில் அவைகளை தனக்கு சாதகமாக்கிக் கொள்ளுகிறான். முடிவு செய்யப்பட்ட கருத்துக்கு விரோதமாக தந்திரமிக்க வஞ்சகங்கள் ஆதாரமாகக் கொண்டு வரப்படுகின்றன. நீதியின் ஒரு வேஷத்தோடு பிரியத்தை உண்டுபண்ணக் கூடிய வசீகரமான சோதனைகள் மாம்ச சிந்தைக்குக் காட்டப்படுகின்றன. அநேகமாகப் புலப்படாதபடி, ஆத்துமா தனது கர்த்தருக்கு "ஆதியில் கொண்டிருந்த அன்பையும்" அவருடைய ஊழியத்தில் ஆதியில் கொண்டிருந்த ஆர்வத்தையும் மறந்து, சத்தியத்தையும் அதன் ஆவியையும் விட்டுத், தூர அலைந்து திரிகிறது. தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அது நடத்தப்படுகிறதில்லை. **-Z '95, 93 (R 1798).**

தன்னுடைய பிரதிஷ்டையை விட்டுவிட்டு பாவம், வஞ்சம், தன்னயம், உலகத்தனம் இவைகளுக்குத் திரும்புவதே பின் வாங்கிப் போவதைக் குறிக்கிறது. "கர்த்தர் தம்முடைய எல்லாப் பரிசுத்தவான்களின் மேலும் பிரியம் வைக்கிறார்" என்று எழுதியிருக்கிற பிரகாரமாக, ஒருவன் தன் தீமையான ஜீவியத்தை விட்டுவிட்டுத் தேவனுக்குத் தன்னை பிரதிஷ்டை செய்வானானால், அது யேகோவா தேவனுக்கு மிகவும் அதிகமான மகிழ்ச்சியைக் கொடுக்கும். அதற்கேற்ப ஜீவனின் வழியை அறியாதவர்களை விட, அதை அறிந்திருந்து விட்டு விட்டவர்களின் மேல் அதிகமாக கோபமாயிருக்கிறார். அவர்கள் அழிவை அடைவதற்காக ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் இருக்கிறார்கள். **-P '20, 71.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 19:26; சங் 85:10; 125:5; ஓசி 11:7; லூக் 9:62; 17:32; மத் 5:13; மத் 6:23; யோவா 17:12; 2தீமோ 2:12; எபி 6:4-9; 10:26-31; 2பேது 2; 3:17; 1யோவா 5:16.

**கோபுர வாசிப்பு : Z '12, 278 (R 5093).**

**வினாக்கள்** : இந்த நாளின் வசனத்திற்கு இசைவாக இந்த வாரத்தில் எனக்கு நேர்ந்த சோதனைகள் எவை? அவற்றை நான் எப்படி மேற்கொண்டேன்? இந்த அனுபவங்களைப் பற்றி நான் செய்த தீர்மானங்கள் என்ன?